**கவனிக்க.**- *2009.04.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1599 - 2009 අප්‍රේල් මස 24 වැනි සිකුරාදා - 2009.04.24**

*1599 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 505 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 507 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 504 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2008, நவெம்பர் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2008, திசெம்பர் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2009, சனவரி 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2009, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

**ஆராச்சிக்கட்டு பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகையும் விற்பனையும் - 2009/2010**

*(2009 ஆம் வருடம் யூலை மாதம் 01 முதல் 2010 ஆம் வருடம் யூன் மாதம் 30 வரை)*

*2009 ஆம் வருடம் யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2010 ஆம் வருடம் யூன் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைத்துள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

**நிபந்தனைகள்:**

1. (அ) தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களினதும் பொது நிபந்தனைகளுக்கு,

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகையிடும் நிபந்தனைகளுக்கமைவாகவும்,

2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கமைய ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பத் தொகையில் 15 சதவீதம் பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழ்களும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பெயரிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:

"................. கள்ளுத்தவறணைக்குரிய ................. இலக்கமுள்ள கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட வேண்டும். 2009.06.04 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதையிடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கை குடியரசு வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான குத்தகையிடும் நிபந்தனைகளுக்கமைய இடல் வேண்டும்.

5. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர் இச்செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும். குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி முற்பகல் 10.00 மணியளவில் மறு விற்பனைக்காக விடப்படும் அன்றைய தின ஏலமுன் வைப்பு குறித்த வர்த்தமானியின் பிரமாணங்களுக்கு அமைவாகும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை ஆராச்சிக்கட்டு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. எம். ஆர். ஜே. கே. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
ஆராச்சிக்கட்டு.

பிரதேச செயலகம்,
ஆராச்சிக்கட்டு.
2009.04.03.

**அட்டவணை**

| பிரதேசம் | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| ஆனைவிழுந்தன் பற்று | கருக்குப்பனை | 10 | 2009, மே | 250 |
| ஆனைவிழுந்தன் பற்று | ஆராச்சிக்கட்டு | 11 | 21 ஆந் திகதி | 250 |
| ஆனைவிழுந்தன் பற்று | பத்துலுஓய | 12 | மு. ப. 10.00 மணி | 250 |

4-544

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொடை, கொஹுவல, மல்வத்த வீதி, இல. 11/1 ஐச் சேர்ந்த பட்டிகிரிய ஆரச்சிகே தொன் சரணபால ஆகிய என்னால் நுகேகொடை, கொஹுவல, மல்வத்த வீதி, 11/1 ஐச் சேர்ந்த திரு. ஜயசூரிய ஆரச்சிகே ரொசான் மங்கள பெரேராவுக்கு வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு குரு நாளிந்த பிரேமச்சந்திரவினால் அத்தாட்சிப்படுத் தப்பட்ட 1999, யூலை 17 ஆந் திகதிய மதிப்பீட்டு இல. 94 ஐக் கொண்ட அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச்செய்கிறேன். அத்துடன் சொல்லப்பட்ட ஜயசூரிய ஆரச்சிகே ரொசான் மங்கள பெரேராவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் ஒப்பமிடப்படும் ஆவணங்கள் பற்றி நான் பொறுப்பாக மாட்டேன்.

பட்டிகிரி ஆரச்சிகே தொன் சரணபால.

கொழும்பு,
2009, மாச்சு 26.

4-518

---

## பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் 2009, மாச்சு 24 ஆந் திகதி முதல் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது :-

நிறுவனத்தின் பழைய பெயர் : டெக் டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்
நிறுவனத்தின் இல. : பிவி 9020
பதிவு அலுவலகம் : தட்டு இல. 16, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 1
நிறுவனத்தின் புதிய பெயர் : டெக் வன் குலோபல் (பிரைவெட்) லிமிட்டெட்

பி. டி. ஓ. பிஸ்கோன் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பனி செக்கட்டரிஸ்.

இல. 65/2, சேர். சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை,
கொழும்பு 02.

4-522

---

## பொது அறிவித்தல்

ஒன்றிணைத்தல்

**த சுவதேசி இன்டஸ்ட்ரியல் வர்க்ஸ் பிஎல்சி - கம்பனி இல. பிகியு 133**
**த சுவதேசி ஹர்பல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்-கம்பனி இல. பீவி 3897**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242 (3) பி ஆம் பிரிவின்படி பிகியு 133 என்ற கம்பனி இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட "த சுவதேசி இன்டஸ்ட்ரியல் வர்க்ஸ் பிஎல்சி" என்ற கம்பனியும் பிவி3897 கம்பனி இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட "த சுவதேசி ஹர்பல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்ற கம்பனியும் குறித்த சட்டத்தின் 242 ஆம் பிரிவின்படி ஒரே உட்பொருளாக ஒன்றிணைக்கப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் "த சுவதேசி இன்டஸ்ட்றியல் வர்க்ஸ் பிஎல்சி" எனப்படும் என்பதோடு ஒன்றிணைப்பானது 2009 ஆம் ஆண்டின் மே மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் அல்லது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தால் அனுமதிக்கப்படும் நாள் தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

ஒன்றிணைக்கப்பட்ட "த சுவதேசி இன்டஸ்ட்றியல் வர்க்ஸ் பிஎல்சி" கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 18 2/1, ஏ, ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியா கட்டிடம், சேர். பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01 என்பதாகும்.

எக்கௌன்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்
கம்பனி செயலாளர்கள்.

4-523

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட அறிவித்தல்

டி அன்ட் என் டிஸ்டிபியூஷன் சொலூஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

(பி. வி. 67403)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்படி, மேற்படி கம்பனியானது 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு, இல. 548பி, நாவல வீதி, இராஜகிரியவில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

பிஸ்னஸ் அன்ட் இன்டஸ்டிரியல் கென்சல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செக்கட்டரிஸ்.

65/2, சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
கொழும்பு 02.

4-525

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் பிரகாரம் கீழ்க்குறிப்பிட்ட கம்பனியின் பதிவு செய்தல் சம்பந்தமான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : வரையறுக்கப்பெற்ற ஸ்னோமென் குரூப் (பிறைவேட்)
கம்பனி இலக்கம் : பீவி66740

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி :* வெல்ல ஒடய, கஹன்தாவ, ரன்ன
*கம்பனி செயலாளர் :* சன்தன குமார த சில்வா சன்தராதுர

*4-532*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் :* ஒரெக் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல. :* பீவி67376
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 45ஏ, கனத்த வீதி, தலப்பத்பிட்டிய, நுகே கொடை

கம்பனிச் செயலாளர்.

*4-533*

---

### அதிகாரத்தை இரத்துச்செய்தல்

இத்தால் உறுதிப்படுத்துவது யாதெனில், 2009.12.19 ஆந் திகதி எச். பி. திலகரத்ன நொத்தாரிசு அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 99, அதிகாரம், இலங்கைச் சனநாயக குடியரசில் இரத்தினபுரி வேவல்வத்த, கதுருகலவத்த, ''சம்பத்'' இல் வசிக்கும் ஹெடகந்தே கிரிப பாலகே சிரிசேன ஆகிய நான், ''சம்பத்'' கதுருகலவத்த, வேவல்வத்த, இரத்தினபுரியில் வசிக்கும் அலுத்கே ஜயவதி அல்லது ஜயவதி அலுத்கே என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அதிகாரத்தை மீளப்பெற்று இரத்துச்செய்துள்ளேன்.

எனவே, இதற்குப் பின் என் அதிகாரத்தைக் கொண்டு என் சார்பாக எதுவித நடவடிக்கை எடுப்பின் நான் அதற்கு பொறுப்பாளியல்ல.

ஹெடகந்தே கிரிபபாலகே சிரிசேன.

*4-543*

---

### அற்றோணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

ஹன்வெல்ல, இஹல ஹன்வெல்லயில் இரத்தினசிறி ரூபசிங்க ஆகிய நான், புத்பிட்டிய, கினிகமயில் ''விக்ரம''வில் வசிக்கும் இந்திராணி புஷ்பலதா ரூபசிங்க (வி/முன் விக்ரமாராச்சி) இற்கு வழங்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜயந்தா ஆர். தொலவத்தை என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 1991, ஏப்பிறல் 24 ஆந் திகதி இடப்பட்ட 78 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவத்தை இன்று முதல் இரத்துச்செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

மேலும் எனக்காக அல்லது என் சார்பில் இதன் பின்னர் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பு ஏற்க மாட்டேன் எனவும் அறிவிக்கிறேன்.

இரத்தினசிறி ரூபசிங்க.

*2009.04.07.*

*4-556*

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) கீழான அறிவித்தல்

''கொன்ட்சிப் ஏஜன்சீஸ் லிமிட்டெட்'' நிறுவனத்தின் பெயர் ''கொன்ட்சிப் ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' என மாற்றப்படுவதுடன், பொது கம்பனி என்ற நிலையிலிருந்து ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்படுவதுடன் அமைப்பின் புதிய உறுப்புரைகளை பின்பற்றுவதாகவும் அதன் பங்குதாரர்கள் 2009.04.15 ஆந் திகதியில் ஏகமனதாக தீர்மானித்திருப்பதனை இத்தால் அறிவித்துக்கொள்கின்றது.

சபையின் கட்டளைக்கிணங்க,

மெக்லரன்ஸ் ஹோல்டிங் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

*4-557*

---

### அட்டோர்ணி தத்துவபத்திரதை இரத்துச் செய்தல்

இல. 149, ஆன்ஸ் வீதி வடக்கு, ஹீலே, ஷெபீல்ட், எஸ்2 3ஜீஎஸ், ஐக்கிய இராச்சியம் எனும் முகவரியைச் சேர்ந்த ஜயந்தி அத்துலத்முதலி சில்வா ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் குருசிங்க அன்ட் கம்பனி, சொலிசிட்டர்ஸ் அன்ட் அட்மினிஸ்ட் ரேர்ஸ் அவர்கள் 11.04.2001 அன்று அத்தாட்சிப்படுத்தி இல. 30/10, 2 ஆவது ஒழுங்கை, அங்குலான ஸ்டேசன் வீதி, மொரட்டுவ எனும் முகவரியைச் சேர்ந்த புஸ்பா ஸ்ரீமதி காரியவசம் என்பவருக்கு வழங்கிய அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை உடனடியாக இத்தால் இரத்துச்செய்கிறேன். இதன்பின் அவரால் மேற்கொள்ளப்படும் என் சார்பான செயற்பாடுகளுக்கு நான் பொறுப்பல்ல.

ஜயந்தி அத்துலத்முதலி சில்வா.

*4-583*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு*

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :

*கம்பனியின் பெயர்* : பளிபான றைட்றோளிக் என்ஜினியறிங் (பிறைவேட்) லிமிட்டெட்

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009.04.02

*கம்பனியின் இலக்கம்* : பீவி67490

*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 38/1/5, வேகட வீதி, மலபல்ல, ஹோமாகம

எக்கௌண்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

4-587

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :

*கம்பனியின் பெயர்* : சீகள் கிறீன் றிசோட் (பிறைவேட்) லிமிட்டெட்

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009.04.02

*கம்பனியின் இலக்கம்* : பீவி67500

*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 474/4, காலி வீதி, கொழும்பு 03

எக்கௌண்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

4-588

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :

*கம்பனியின் பெயர்* : யூரோநிப்பன் பிளாண்டேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009.04.02

*கம்பனியின் இலக்கம்* : பீவி67489

*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 262, காலி வீதி, தல்பிட்டிய வடக்கு, வாதுவ

எக்கௌண்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

4-589

---

# ஏல விற்பனைகள்

## றுஹுன அபிவிருத்தி வங்கி - தெகனதுர கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏல விற்பனை

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.06.03 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்**.- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெல்லபட தலல்லையில் அமைந்துள்ள பொரதமனிய தோட்டத்தின் பிரித்து வேறாக்கப்பட்ட இல. 01 என்ற துண்டிற்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான திரு. விஜேவீர அவர்களினால் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட இல. 4708 இல் 1993.10.31 ஆந் திகதிய வரைபடத்திற்கிணங்க பிரிக்கப்பட்ட இல. 33 என்ற பத்து தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.5பே.) விஸ்தீரணம் கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்பட மேற்கூறப்பட்ட வரைபடத்தின் பாதைக்காக வேறுபடுத்திய நிலத்துண்டும் பாதைக்காக உபயோகிக்கக்கூடிய உரிமையும் கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2008.12.26 ஆந் திகதிக்குரிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2009.02.10 ஆந் திகதிய ‘‘தினமின’’, ‘‘தினகரன்’’, ‘‘த ஐலண்ட்’’ பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- தலல்ல வடக்கு பாடசாலை அருகே விமும் லக்சிரி உயன வீதியில் வென்தேசிவத்தை ரயில் பாதையைத் தாண்ட 50 மீற்றர் செல்ல இடப்பக்கமாக உள்ள பாதையில் 3 ஆவது வீடும் காணியுமாகும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;

(5) விற்பனைச் செலவும், வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும்;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரை கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புறுன, அனகாரிக தர்மபால மாவத்தையின் இல. 382 A என்ற முகவரியில் அமைந்துள்ள றுஹுுண அபிவிருத்தி வங்கியின் (தலைமை அலுவலகம்), முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041 - 2228731, 071-4438516

4-520/1

---

**றுஹுுன அபிவிருத்தி வங்கி - வெலிகம கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள் ஏலவிற்பனை**

றுஹுுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.06.01 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் மிதிகம விலேகொடயில் அமைந்துள்ள மாதம்பே தோட்டத்தின் பிரித்து வேறாக்கப்பட்ட இல. 03 என்ற துண்டிற்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான திரு. என். விஜேவீர அவர்களினால் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட இல. 5536 இல் 1997.07.02 ஆந் திகதிய வரைபடத்திற்கிணங்க பிரிக்கப்பட்ட இல. 3ஏ என்ற முப்பத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 35பே.) கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்படவாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2009.01.09 ஆந் திகதிக்குரிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2009.02.20 ஆந் திகதியின் "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- வெலிகம-இப்பாவல வழியாக இமதுவ வழியில் இப்பாவல பாடசாலை சந்தியில் தெற்காக விழும் ரணமதுரகம, விலேகொடயிலிருந்து கி. மீ. 01 அளவு தூரம் செல்ல விலேகொட மாதம்பாவத்த என்ற இக்காணி பாதையின் இடப்பக்கமாக அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள் வனவாளரினால் இறுதியில் கீழ்கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 2 1/2 % ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும், வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும்;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரை கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புறுன, அனகாரிக தர்மபால மாவத்தையின் இல. 382 A என்ற முகவரியில் அமைந்துள்ள றுஹுுண அபிவிருத்தி வங்கியின் தலைமை அலுவலகம)', முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041 - 2228731, 071-4438516

4-520/2

**றுஹுன அபிவிருத்தி வங்கி – தங்காலை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.06.08 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

1. **ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**– தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே தெற்கு கிருவாபத்துவையில் தங்காலை நகர எல்லைக்குள் மெகெடிய பிரிவில் தீபாங்கர பாதையில் அமைந்துள்ள மஹகேன என்னும் காணி பகிர்ந்து வேறாக்கப்பட்ட இல. 03 என்ற துண்டு நிலஅளவையாளர் திரு. ஹேமசிரி சிரிவர்தன அவர்கள் மூலம் மீண்டும் பகிர்ந்து வேறாக்கப்பட்ட 1019 ஆம் இலக்க 1997.07.15 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் இல. 4 என்ற பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்பட அனைத்துமாகும்.

2. மேற்கூறப்பட்ட மெதகெடியவில் அமைந்துள்ள மஹகேன என்னும் காணி பகிர்ந்து வேறாக்கப்பட்ட மேற்கூறப்பட்ட 1019 ஆம் இலக்க வரைபடம் வரை லொட் இல. 6 என்ற ஒன்பது தசம் நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.4பே.) கொண்ட பாதைக்கான ஒரு பகுதி நிலத்தை உபயோகிக்கக்கூடிய உரிமையைக் கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு.**– 2008.12.26 ஆந் திகதிக்குரிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2009.02.18 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**– தங்காலையிலிருந்து மெதகொடபிட்டிய வீதி வழியே ஏறக்குறைய 150 மீற்றர் செல்லும்போது சொத்து தென்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**– வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும், வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும்;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரை கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புறுன, அனகாரிக தர்மபால மாவத்தை, இல. 382ஏ என்ற நிலையத்தில் அமைந்துள்ள றுஹுண அபிவிருத்தி வங்கியின் (தலைமை அலுவலகம்), முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

தொலைபேசி இல.: 041 – 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041 – 2228731, 071-4438516

4-529/1

---

**றுஹுன அபிவிருத்தி வங்கி – தங்காலை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.06.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**– தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே தெற்கு கிருவாபத்துவையில் குடாவெல்லையில் அமைந்துள்ள மஹவத்த என்னும் காணி திரு. எல். செரசிங்ஹ நிலஅளவையாளர் மூலம் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட 8 ஆம் இலக்க 1996.08.21 ஆந் திகதிய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 1ஏ கொண்ட இருபத்தேழு தசம் ஆறு ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27.66பே.) கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை , கட்டிடங்கள் உட்பட அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**– 2008.12.26 ஆந் திகதிக்குரிய அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2009.02.18 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**– குடாவல்லை சந்தியில் இருந்து ஹூம்மானைக்குச் செல்லும் பாதையால் செல்லும்போது 3 ஆவது கோகொடுவைக்கு அருகாமையில் (இலங்கை வங்கிக்கு முன்னால்) பாதுகாக்கப்பட்ட சொத்து தென்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிபெற்ற கொள்வன வாளரினால் இறுதியில் கீழ்கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும், வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும்;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரை கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புறுன, அனகாரிக தர்மபால மாவத்தை இல. 382 A என்ற நிலையத்தில் அமைந்துள்ள றுஹுண அபிவிருத்தி வங்கியின் (தலைமை அலுவலகம்), முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041 - 2228731, 071-4438516

4-529/2

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.02.27 ஆந் திகதிய 1591 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2009.02.19 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, பிட்டகோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஆர். எஸ். மஹாநாம 2009.05.23 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபற்றுவில், பியகம பிரதேச சபை எல்லைகளுள் (மாகொல உப அலுவலகம்) கோனவலயில் அமைந்த கொஸ்கும்புர றோட், வரிமதிப்பிலக்கம் 40/15 ஐக் கொண்ட 'கொஸ்கும்புர எஸ்டேட்' என தற்சமயம் யாவரும் அறிந்ததும் 'கொரககஹவத்த அல்லது தெல்கஹவத்த, தெல்கஹகனத்த, கொஸ்கும்புரே பில்லாவ, கொஸ்கும்புரே ஓவிட்ட, கொஸ்கும்புரே மடககரயும் மடககரயும் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. டீ. எஸ். தி சில்வா தயாரித்த 1996, ஏப்பிறல் 26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3264/பி இல் விபரித்த துண்டு 6 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : எலயும், விக்ரமரத்னயினதும் ஏனையோரினதும் வயலும் ; கிழக்கில் : துண்டு 7 உம் ; தெற்கில் : துண்டு ஆர் 3 உம் ; மேற்கில் : துண்டு 5 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3264/பி இன்படி பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே.) அல்லது சைபர் தசம் சைபர் மூன்று ஏழு ஒன்பது நான்கு ஹெக்டெயர்கள் (ஹெக்.0.03794) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் சீ504/277 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு கோனவலயில் அமைந்த கொஸ்கும்புர றோட், வரிமதிப்பிலக்கம் 40/15 ஐக் கொண்ட தற்சமயம் 'கொஸ்கும்புரே எஸ்டேட்' என யாவரும் அறிந்ததும் 'கொரககஹவத்த அல்லது தெல்கஹவத்த, தெல்கஹகனத்த, கொஸ்கும்புரே பில்லாவ, கொஸ்கும்புரே ஓவிட்ட, கொஸ்கும்புரே மடககர மற்றும் மடககர என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3264/பி இல் விபரித்த துண்டு 7 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : விக்ரமரத்னயினதும் ஏனையோரினதும் வயலும் ; கிழக்கில் : துண்டு 8 உம் ; தெற்கில் : துண்டு ஆர்3 உம் ; மேற்கில் : துண்டு 6 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3264/பி இன்படி பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே.) அல்லது சைபர் தசம் சைபர் மூன்று ஏழு ஒன்பது நான்கு ஹெக்டெயர்கள் (ஹெக்.0.03794) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் சீ504/278 இல் பதிவுசெய்யப்பட்டது.

அத்துடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. எஸ். தி சில்வா தயாரித்த வரைபடம் இல. 1781 இல் (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) துண்டு 7 மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. எஸ். தி சில்வா தயாரித்த வரைபடம் இல. 1441 இல் (10 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்ட) துண்டு 2, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. எஸ். தி சில்வா தயாரித்த வரைபடம் இல. 3264ஏ இல் (10 அடி மற்றும் 15 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்ட) துண்டு 2, மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3264பி இல் (15 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்ட) துண்டு ஆர் 3 என அடையாளமிட்ட காணித்துண்டுகள் மீதான வரியுரிமையும் ஆகும்.

பீ. பீ. ஜே. வீரசிங்ஹ,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கிராண்ட்பாஸ் கிளை.

4-584

**டீஎப்சிசி வங்கி**

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் ஏல விற்பனை**

***995 மற்றும் 1718 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விவரணம்***

**அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஐ. கொட்டம்பகே அவர்களால் வரையப்பட்ட 2005, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 மற்றும் 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான - ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிபலாத்த கோரளே, ஊவா பரணகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெவகெதரகம, லுணுவத்தயில் அமைந்துள்ள கினிகட்டுகெலே எனவும் கினிகட்டுகல எனவும் குறிப்பிடப்படும் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான இரண்டு காணித்துண்டுகள். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கியதாக**

***(காணியின் விஸ்தீரணம் : துண்டு 1 – 0ஏ. 0றூ. 28.50பே. ; துண்டு 2 – 0ஏ. 1றூ. 04.70பே.)***

*(பதுளை பிரசித்த நொத்தாரிசு எச். எம். சீ. சீ. எச். மெனிகே அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு, 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 1718 ஆம் இலக்க மற்றும் 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதியிடப்பட்ட 995 ஆம் இலக்க பிணை உறுதிகள் மீதான வருமதியான கொடுப்பனவு தவணை தவறியதால், லுணுவத்தயைச் சேர்ந்த ஆரச்சி பத்திரணகே அசேல இந்திரனந்த அவர்களால் டீஎப்சிசி வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

டிஎப்சிசி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 38,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சிசி வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட,
ஐஎஸ்ஓ 9001 : 2000 தரச்சான்றிதழ் பெற்ற
ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித் தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொறிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி: 011-2502680, 2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

4-590

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி – தளவத்துகொட கிளை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்த ஏவகம கோரலயில் கடுவெல பிரதேச சபை எல்லையில் தலவத்துகொட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நளின் ஏரத்தின் 2005.08.17 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2005/354 இல் காண்பிக்கப்பட்டுள்ள மில்லகாலன்த மற்றும் அந்துருவண காகணத்த என்ற காணியின் பகுதிபடுத்திய லொட் 23ஏ (விஸ்தீரணம் - 0ஏ.0றூ.20பே.) ஏல விற்பனை

*(கடன் எடுத்த "தீரி மயிண்ட் பூட் புரசசிங் (பிறைவேட்) லிமிட்டெட்" மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி'க்கு ஈடுவைத்துள்ளது.)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. (பிக்குயு 116) பணிப்பாளர் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் இவ்வட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை அதே இடத்தில் 2009, மே மாதம் 15 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2008.12.05 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும் மற்றும் 2008.12.10 ஆந் திகதியுடைய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2009.04.24 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2008.12.10 ஆந்*

திகதியுடைய ''திவயின'' மற்றும் ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பர்ததுக்காக 2009.04.24 ஆந் திகதியையுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2009.04.28 ஆந் திகதியுடைய ''திவயின'' மற்றும் ''த ஐலண்ட்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம்**.- தளவத்துகொட சந்தியில் இருந்து ஓக்கன்தர வீதியூடாக 300 மீட்டர் தூரம் சென்று ருவுணாபுர மாவத்தையை அடையவும். அந்த றோட்டில் 350 மீட்டர் சென்று வலதுபக்கம் காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- ஏலமுடிவில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் ''கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பிரதான கிளையில் அல்லது தளவத்துகொட கிளை''யில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு.- முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, 7, சுரம்யா கட்டிடம், கோட்டே வீதி, தளவத்துகொட. தொலைபேசி இல. : 0112-773152, பெக்ஸ் இல. : 0112-773553

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற மூத்த ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்
(வர்த்தக மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம்),
அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகளின் மூத்த ஏலதாரர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி /பெக்ஸ் : 2445393

4-592

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.